அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் :145/2016
தேதி. :12/09/2016

# கர்நாடகத்தில் தமிழக மாணவர் மீது தாக்குதல் சமக நிறுவனத் தலைவர் ஆர் சரத்குமார் கண்டனம்

இடைக்கால மனு ஒன்றினை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்து, உரிய அரசாணை பெற்று காவேரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பின் படி நமக்குரிய தண்ணீர் பங்கினை காவேரியிலிருந்து நாம் பெற்றிடுவோம் என்று கடந்த மாதம் சட்டசபையில் சூளுரைத்து பல்வேறு போராட்டத்திற்கு பிறகு தமிழகத்திற்கு காவிரியில் 10 நாள்களுக்கு தினமும் 15 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தின் மூலம் தீர்ப்பை மாண்புமிகு தமிழக முதல்வர் பெற்று தந்துள்ளார். மேலும் கர்நாடக அரசு தமிழக அரசை எதிர்த்து தாக்கல் செய்த இடைக்கால மனுவிற்கு உச்சநீதிமன்றம் செப்டம்பர் 20ந்தேதி வரை தமிழகத்துக்கு நாள்தோறும் 12 ஆயிரம் கன அடி நீர் திறக்க வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன் மூலம் தமிழகத்தின் காவேரி டெல்டா பகுதிக்கு தேவையான தண்ணீர் வரத்து இருக்கும் நிலையில் கர்நாடகாவை சேர்ந்த பல அமைப்புகளும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில் முகநூலில் தமது சொந்த கருத்தை பதிவு செய்த காரணத்திற்காக, பெங்களூரில் தங்கி தனியார் இன்ஜினியரிங் கல்லூரியில் பட்டப்படிப்பு பயிலும் தமிழகத்தை சேர்ந்த மாணவர் சந்தோஷ் கன்னட வெறியர்களால் கொடூரமான முறையில் தாக்கப்பட்டிருக்கும் செய்தி மிகவும் கண்டனத்திற்குரியது.

முகநூலில் மாணவர் வெளியிட்டுள்ள சொந்த கருத்திற்காக மன்னிப்பு கேட்கும்படியும், கன்னடாவிற்கு ஆதரவாக கருத்தை தெரிவிக்கும்படியும் கட்டாயப்படுத்தி, அவர் மன்னிப்பு கேட்கும் காட்சிகளை காணொலியாக பதிவு செய்து கன்னட வெறியர்கள் வெளியிட்டிருப்பது மனித உரிமையை மீறும் செயலாகும். இந்தியர்கள் என்ற உணர்வுடன் ஒற்றுமையாக செயல்பட வேண்டிய மக்கள் காவிரி பிரச்சனையின் மூலம் இவர் இந்த மாநிலத்தார், இந்த இனத்தார் என்ற பிரிவினையை உண்டாக்கி தாக்குதல் நடத்துவது மிகவும் வருந்தத்தக்கதாகும். தண்ணீர் அனைவருக்கும் பொதுவானது. மத்திய அரசு இதனில் உடனடியாக தலையிட்டு இரு மாநில பிரச்சனைகளையும் கலைய நதிநீர் இணைப்பின் மூலமே நிரந்தர தீர்வு காண முடியும் என்பதனை தெரிவித்துக் கொண்டு அதற்கான வழிவகைகளை பாரத பிரதமர் மோடி அவர்கள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டுமாய் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார் B.Sc**
**நிறுவனத் தலைவர்**